# * கோபிசெட்டிபாளையம் நகராட்சி *

கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் ஜவகர்லால் நேரு தேசிய புனரமைப்பு திட்டத்தின்கீழ் ஒருங்கிணைந்த தேசிய குடிசைப்பகுதி மேம்பாட்டுத்திட்டம் மற்றும் நகர்புற ஏழைகளுக்கான அடிப்படை வசதி திட்டத்தில் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை மேற்கொள்ள 28.01.2009 ஆம் தேதியில் HUDCO டெல்லி அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் இந்நகராட்சியின் வார்டு எண் 5 மற்றும் வார்டு எண்23ல் ரூ. 256.32 இலட்சம் மதிப்பீட்டிற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

நகர்மன்றம் தனது தீர்மான எண் 420 நாள் 09.02.2009 ல் மேற்படி விபரத்தினை பதிவு செய்துள்ளது.

## அனுமதி வழங்கப்பட்டுள்ள பணிகளின் விவரம்.

| வ. எண் | பணிகளின் விவரம் | மதிப்பீட்டுத் தொகை ( ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| வார்டு எண் – 5 விவேகானந்தர் தெரு. | | |
| 1 | 101 புதிய வீடுகள் கட்டுதல் | 108.07 |
| 2 | 101 குடிநீர் இணைப்புகள் | 6.24 |
| 3 | விவேகானந்தா தெரு பகுதியில் சமுதாய கூடம் கட்டுதல் | 20.00 |
| 4 | விவேகானந்தா தெருக்களில் தார் சாலை அமைத்தல் | 11.00 |
| 5 | விவேகானந்தா வீதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைத்தல் | 7.75 |
| 6 | விவேகானந்தா தெரு 4 வது குறுக்கு தெருவில் மின்மோட்டாருடன் கூடிய ஆழ்துளை கிணறு அமைத்து தண்ணீர் வசதி செய்தல் | 1.80 |
| 7 | விவேகானந்தா தெரு 7 வது தெருவில் மின்மோட்டாருடன் கூடிய ஆழ்துளை கிணறு அமைத்து தண்ணீர் வசதி செய்தல் | 1.80 |
| 8 | விவேகானந்தா தெருவில் 8 எண்ணிக்கை புதிய தெருவிளக்குகள் அமைத்தல் ( 1 x 40 வாட்ஸ் டியூப் லைட்) | 1.80 |
| | மொத்தம் | 158.46 |

| | | |
|---|---|---|
| வார்டு எண் – 23 சிவசண்முகம் வீதி. | | |
| 9 | 76 புதிய வீடுகள் கட்டுதல் | 81.32 |
| 10 | 76 புதிய குடிநீர் இணைப்புகள் | 4.69 |
| 11 | சிவசண்முகம் வீதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைத்தல் | 8.25 |
| 12 | சிவசண்முகம் வீதி பச்சமலை சாலைக்கு அருகில் மின் மோட்டாருடன் கூடிய ஆழ்துளை கிணறு அமைத்து தண்ணீர் வசதி செய்தல் | 1.80 |
| 13 | சிவசண்முகம் வீதி 2வது வீதியில் மின் மோட்டாருடன் கூடிய ஆழ்துளை கிணறு அமைத்து தண்ணீர் வசதி செய்தல் | 1.80 |
| | மொத்தம் | 97.86 |
| | பணிகளின் மொத்த மதிப்பீடு | 256.32 |

மேற்படி பணிகளில் 177 புதிய வீடுகள் கட்டிக்கொள்ள விண்ணப்பங்கள் பெறப்பட்டு பரிசீலனை செய்து நான்கு தவணைகளில் தொகை வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ( ஒரு வீட்டிற்கான மதிப்பீட்டு தொகை ரூ. 1.07 )

மேற்படி பகுதிகளில் அடிப்படை வசதி பணிகள் மேற்கொள்ள 06.03.2009 ம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்க மாநில அளவிலான செய்தித்தாளில் விளம்பரம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், விருப்பமுள்ள பயனாளிகளில் வார்டு எண் 5ல் உள்ள பயனாளிகள் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியிலும் , வார்டு எண் 23ல் உள்ள பயனாளிகள் இந்தியன் வங்கியிலும் வங்கிக்கடன் பெற வசதி செய்யப்பட்டுள்ளது.